Drinking water scheme

* 158 Q.—THIRU. K. VINAYAKAM: Will the Hon. the Minister for Public Health be pleased to state :—

(a) the present stage of the scheme of supplying drinking water facilities and giving individual connection to the people of Tiruttani Town Panchayat, Chingleput district from Kusasthali river bed; and

(b) when the scheme was started ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) திருத்தணி நீர் வழங்கும் திட்டத்தின் முதல் நிலையான பம்பிங் மெயின் (pumping Main) அமைக்கும் பணி நிறைவேற்றப்படுவதற்காக எடுத்துக்கொள்ளப்பட்டு, ஏறக்குறைய பாதிப்பணி முடிவடைந்துள்ளது. இப்பணி முழுதும் நிறைவேற்றப்பட்டவுடன், வீடுகளுக்குப் பஞ்சாயத்து தனித்தனி இணைப்புகள் கொடுக்கும்.

(இ) இத்திட்டம் குறித்த பணி 1966 ஜூன் திங்களில் துவக்கப்பட்டது.

திரு. கே. விநாயகம் : ஐயா, நான் கேள்வி போட்ட நேரத்தில் அப்போது ஆரம்பத்தில் இருந்தது. இப்போது ஏறக்குறைய முடியும் தறுவாயில் இருக்கிறது. 30-ஆம் தேதி வரும் ஆடிக் கிருத்திகை திருவிழாவிற்கு ஏராளமான யாத்திரிகர்கள் வருவார்கள். தயவு செய்து, பொதுமக்களுக்கும் யாத்திரிகர்களுக்கும் தண்ணீர் வழங்குகிற இந்தத் திட்டத்தை 30-ஆம் தேதிக்குள் துவங்க வேண்டுமென்று முதலமைச்ச ரவர்கள் இசைந்து ஒரு தேதியைக் கொடுப்பாரா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : தம்பியின் கோயில் பற்றி அண்ணன் இவ்வளவு அக்கறை காட்டுவது குறித்து நான் மகிழ்ச்சி யடைகிறேன்.

* 159 வினு—**திரு. கரு. சீமைச்சாமி :** மதிப்பிற்குரிய பொதுச் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சிவகெங்கைக்கு (இராமநாதபுரம் மாவட்டம்) குடி தண்ணீர் வழங்கும் திட்டம் தற்போது எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சிவகெங்கை நீர்வழங்கு மேம்பாட்டுத் திட்டத்திற்கான புலனுய்வு வேலை துரிதமாக நடைபெற்று வருகிறது.

திரு. கரு. சீமைச்சாமி : சார், போன மந்திரி சபை இருந்த பொழுதே சிவகெங்கைக்குக் குடிதண்ணீர் வழங்குவது சம்பந்தமாக இதே மாதிரி ஆராய்ச்சி இருப்பதாகச் சொன்னுர்கள். இரண்டு வருஷமாக அப்படியே இருக்கிறது. சிவகெங்கையிலுள்ள பெண்கள் தண்ணீர் எடுக்கவேண்டுமென்றால் ஒரு மைல், இரண்டு மைல் தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, இது குறித்து விரைவில் ஏற்பாடு செய் வதற்கு முயற்சி செய்வார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : துரிதமாக வேலைகள் நடக்க சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்.

Investigation work was taken up after the Municipality paid the amount. The Municipality paid the amount only last year and hence the delay in taking up the work.

திரு. நா. காசிராமன் : ஐயா, இந்த சிவகெங்கை குடி தண்ணீர்த் திட்டத்திற்கு மொத்த மதிப்பீட்டுச் செலவு என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபற்றிய விவரங்கள் என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் : வினுக்கள், விடைகள் முடி வடைந்தன.